2019 ஜூலை 4]

நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

சுற்றுலாத் தகவல் மையம்

***48483—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலையில் சுற்றுலாத் தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலையில் சுற்றுலாத் துறைமூலம் தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்கின்ற வினாவினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினவியிருக்கின்றார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் சுற்றுலா அலுவலகமும், கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையம் மற்றும் இரயில் நிலையம் ஆகியவற்றில் சுற்றுலாத் தகவல் மையங்களும் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. எனவே,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலையில் சுற்றுலாத் தகவல் மையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி.கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் குல விளக்கு, மறைந்தும் மறையாமலும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றும் நீங்காமல், விண்ணுலகம் சென்றும் எங்களையும், கழகத்தையும், ஆட்சியையும் வழி நடத்திவரும் எங்களின் உயிர் மூச்சு “அம்மா”.(மேசையைத் தட்டும் ஒலி) நொடிப் பொழுதும் நீங்காமல் எங்களின் எண்ணங்களிலும், இதயங்களிலும் செயல்களிலும் கலந்துள்ள எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கியும், அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை அம்மா அவர்களின் வழியில் அம்மா அவர்களின் ஆசியோடு அரசை வழி நடத்தி, ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றி, மக்களின் அன்பைப் பெற்று ஆட்சி நடத்திவரும் கழகத் துணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக ஒருங்கிணைப்பாளரும், மாண்புமிகு துணை முதலமைச்சருமான அண்ணன் OPS அவர்களையும் வணங்குகிறேன். கோவை தந்த கொங்கு நாட்டு சிங்கம், எங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்புச் சகோதரர், மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் அமைந்துள்ள வால்பாறை, சுற்றுலாவிற்குப் பெயர் போன இடம். இந்தச் சுற்றுலாத் தலத்திற்கு, வட மாநிலங்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் கணிசமான அளவில் வருகின்றனர். 40 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட வால்பாறையைச் சுற்றி எழில் கொஞ்சும் மலைகள், தேயிலைத் தோட்டங்கள், டாப்ஸ்லிப், யானைகள் முகாம், பாலாஜி கோயில், மாசாணியம்மன் கோயில் மற்றும் வனத் துறையால் நிருவகிக்கப்படும் பல விடுதிகள் உள்ளன. இவற்றையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கவும், இவ்வசதிகள் குறித்துப் பொது மக்களுக்குத் தகவல் தெரிவிக்கவும்,

2019 ஜூலை 4]

ஆனைமலையில் ஒரு சுற்றுலாத் தகவல் மையம் ஏற்படுத்துவது அவசியமாகிறது. ஆனைமலையில் சுற்றுலாத் தகவல் மையம் ஏற்படுத்த இயலாது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். சாமானிய மக்கள் பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்குச் செல்வதற்கு பேருந்து வசதி மட்டுமே உள்ளது. எனவே, பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகில் இந்தச் சுற்றுலாத் தகவல் மையத்தை அமைத்துத் தந்தால், வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற சுற்றுலாத் தலங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் கூடும் வாய்ப்புள்ளது. அங்கு வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களைப் பார்த்து ரசிக்க ஏதுவாக இருக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகில் ஒரு சுற்றுலாத் தகவல் மையத்தை அமைத்தால், பொள்ளாச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள வட்டாரப் பகுதிகளில் உள்ள சுற்றுலா மையங்களுக்கும் பொதுமக்கள் வந்து செல்ல கண்டிப்பாக விளம்பரம் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், கோவை மாவட்டம் ஒரு முன்னோடி சுற்றுலா மாவட்டமாக உருப்பெறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகிலோ அல்லது ஆனைமலை பேருந்து நிலையம் அருகிலோ ஒரு சுற்றுலாத் தகவல் மையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற எனது கோரிக்கையினை கனிவோடு பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழியாறு அணை, மலைகளால் சூழப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. அழகிய இயற்கைக் காட்சிகள் கொண்ட, மலைகளால் சூழப்பட்ட அணையாக ஆழியாறு அணை அமைந்துள்ளது. பொள்ளாச்சி மற்றும் வால்பாறைக்கு இடையில் அமைந்துள்ள இந்த நீர்த்தேக்கம் கோயம்புத்தூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவிலும், பொள்ளாச்சியிலிருந்து 24*

கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. வால்பாறைக்கு வருகைதரும் பெரும்பாலான மக்கள் ஆழியாறு அணைக்கு வந்து செல்கின்றனர். ஆழியாறு அணையின் அருகில் அறிவுத் திருக்கோயில் அமைந்துள்ளது. ஆழியாறு செல்லும் வழியில் குரங்கு அருவி அமைந்துள்ளது. ஆழியாறு அணைப் பகுதியில் கோட்டூர் பேரூராட்சியின்மூலம் படகு குழாம் அமைத்து, படகு சவாரி செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆழியாறு அணைப் பகுதியில் குழந்தைகள் பூங்கா அமைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆழியாறு அணைப் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிக்காக, சுற்றுலாத் துறையின்மூலம் 2016-2017 ஆம் ஆண்டுகளில் ரூ.195 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, சுற்றுலாத் தகவல் மையத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்கின்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தகவல் மையம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறைக்கு வருகின்ற அனைத்து சுற்றுலாப் பயணிகளும் ஆழியாறு அணை, குரங்கு அருவியைப் பார்த்துவிட்டு, பாலாஜி கோயில், சோலையாறு அணை போன்ற இடங்களுக்குச் செல்கின்றனர். ஆழியாறு அணையிலும், சோலையாறு அணையிலும் பூங்கா இல்லை. அங்கு ஊட்டி, கொடைக்கானலில் உள்ளதுபோல் பூங்கா அமைத்துத் தந்தால் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, ஆழியாறு அணையிலோ அல்லது சோலையாறு அணையிலோ அழகிய பூங்கா ஒன்றை

2019 ஜூலை 4]

அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அமைத்துத் தருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன், நன்றி.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லிவிட்டார்கள்.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***4970—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மேற்குப் பகுதியில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஈரோடு மேற்குப் பகுதியில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஈரோடு வட்டம், பெரியசேமூர் கிராமத்தில், நத்தம் புல எண்.மி 566/25-ல் உள்ள 0.27.30 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலம் போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 273.28 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்த இடத்தில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.